தமிழ்மணம்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

Tamilmanam International Research Journal of Tamil Studies
E-ISSN: 3049-0723 & P-ISSN: 3107-7781
Volume 7, Number 01, January 2026

# A glimpse into the lives of aravanis who transformed, changed body, shifted, changed race, stumbled and flourished

**J. Jayashree[a], S. Kalavathy[b],**
*a. Research scholar, VISION for WISDOM, Bharathiar University,*
*b. Secretary, Calm Trust, SKY yoga, Chennai, Email.Id. kvseksiva@gmail.com.*

[a]**Corresponding Author: J. Jayashree, Email:** jayavijay10@gmail.com, Mobile Number: 9844167980,
ORCiD: https://orcid.org/0009-0009-7127-6913

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 24, 2025
Revised
December 24, 2025
Accepted
December 26, 2025
Published
January 01, 2026

**ABSTRACT**

This review aimed at tracing the historically spoken lifestyle of Tamil transgender, rituals followed by them since ages, their traditional heritage by surfing nearly 15 Tamil books published exclusively for transgender written by various authors. Nomenclature itself is a huge subject where as they have many types of identity names, names of relationships, different code language for currency identification, a unique language for them named as kowdi language. The gender reassignment surgeries they underwent have a hierarchical spiritual ritual format which was a surprising factor. This article will be a nutshell of life stages of transgender and their culture. They had a peculiar group life rules, family principles and social customs for their own kind. In-spite of all these they had a desperate search for source of income, survival and an urge to come up in life.

**Key words**: *Transgender, Third gender, kowdi language, Rituals of TG, Life style of TG.*

## References:

1. Ayappan, Ki. Aravaniyam [Aravaniyam]. 1st ed., 2012, p. 272.
2. Jeyaseelan, Su. Ma. Thirunangaigal Vazhviyal Iraiyiyal [The Life and Theology of Transwomen]. 1st ed., 2010, p. 88.
3. Arivuraj, Na. Moondram Paalinam: Oru Samooga Ina Varaiviyal [Third Gender: A Social Ethnography]. 1st ed., 2008.
4. Babu, Priya. Aravanigal Samooga Varaiviyal [Social Ethnography of Aravanis]. 1st ed., 2007, p. 96.
5. Babu, Priya. Vetrip Paathaiyil Thirunangaigal [Transwomen on the Path to Success]. 1st ed., 2007.
6. Sakthivel, Baluvinayagam. Koovagam Koothandavar [Koovagam Koothandavar]. 1st ed., 2007, p. 125.
7. Ramachandran, Si. Tamil Samoogathil Aravanigal: Or Aaivu [Aravanis in Tamil Society: A Study]. 1st ed., 2008, p. 104.
8. Ayappan, Ki. Aravanigal Andrum Indrum [Aravanis Then and Now]. 1st ed., 2011, p. 168.
9. Babu, Priya. Vetrip Paathaiyil Thirunangaigal [Transwomen on the Path to Success]. 1st ed., 2007. (Duplicate of entry 5).
10. Ayappan, Ki. Aravanigal Andrum Indrum [Aravanis Then and Now]. 1st ed., 2011, p. 168. (Duplicate of entry 8).
11. Muni, Ve. Aravanigalin Panmuga Adaiyaalangal [Multifaceted Identities of Aravanis]. 1st ed., 2010, p. 174.
12. National Transgender Discrimination Survey (NTDS) Report. National Center for Transgender Equality, https://transequality.org/sites/default/files/docs/resources/NTDS_Report.pdf.
13. "Transgender Census 2011." Census 2011, https://www.census2011.co.in/transgender.php.

Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# ‘உருமாறி, உடல்மாறி, இடம்மாறி, இனம்மாறி, தடுமாறி, தழைத்திட்ட அரவாணிகளின் வாழ்வியலும் பழமரபும் ஓர் பார்வை’

[a]ஜெ.ஜெயஸ்ரீ, [b]எஸ்.கலாவதிசேகர்.

**ஆய்வு சுருக்கம்**

அரவாணிகளின் பிறப்பு இன பிறழ்வுகள் நிகழ்கின்ற போது ஏற்படுகின்ற இனம்புரியாத மன உணர்வுகளுடன் பள்ளி பருவம், பள்ளிகூடத்தில் ஏற்படும் சோதனைகள், அரவாணியாக மாறுகின்ற தருணத்தில் குடும்பத்தில் நிராகரிப்பு, சமூகத்தினர், சுற்றத்தார், குடும்பத்தார் அணுகும் முறைகள், பின்பு வீட்டைவிட்டு வெளியேறி குடியேறும் கூட்டு வாழ்க்கை, சமூக வாழ்க்கை எத்தகையது, அவர்கள் வாழ்க்கைக்காக வகுத்து கொண்ட சட்டத் திட்டங்கள், நம்பிக்கைகள், சடங்கு முறைகள் இவற்றால் அரவாணிகள் கண்ட நன்மை தீமைகள், அனுபவிக்கும் துன்பங்கள் மற்றும் என்னவாக ஆகவேண்டும் என்று எதிர்பார்த்த வாழ்க்கைக்கும் படித்த படிப்பிற்கும் செய்கின்ற தொழிலுக்கும் உள்ள முரண்பாடுகள், ஆகியவற்றை ஆராய்ந்துள்ளது இந்த ஆய்வு.

**முக்கிய வார்த்தைகள்:** திருநங்கை, மூன்றாம் பாலினம், கவுடி மொழி, திருநங்கையின் சடங்குகள், திருநங்கையின் வாழ்க்கை முறை.

**மூன்றாம் பாலினம்:**

மனிதர்கள்; ஒவ்வொருவரும் சமூகத்தின் அங்கம், அம்மனித இனம் மூன்றாக உள்ளனர்;. ஆணினம், பெண்ணினம் நாம் அனைவரும் அறிந்ததே ஆயினும் ‘அலி’ எனும் மூன்றாம் பாலினம் பற்றி இச்சமூகத்தில் வாழும் அ்வைரும் அறியவேண்டிய அவசியம் இக்காலத்தின் கட்டாயமாகும். ஆணுமில்லாமல் பெண்ணுமில்லாமல் இருப்பதால் இவர்களுக்கு ‘அலி’ என்று பெயர். உலகம் முழுவதும் பொதுச் சொல்லாக உள்ளது டிரான்ஸ்ஜென்டர் (Transgender).[1]

இவர்கள் கூத்தாண்டவர் எனும் தமிழ் கடவுளாகிய அரவாணி மனைவியாகத் தங்களைக் கருதுவதால் இவர்களுக்கு “அரவாணி” என்ற பெயரும் இதுபோல் கோத்தி, யூனக்ஸ் (Eunuchs) “ஹிஜிராஸ்” (uijiras), திருநங்கைகள் (Thirunangaigal), திருநம்பிகள் (Thirunambi) [1] போன்ற பல பெயர்களும் உண்டு. இப்படிப்பட்ட பிறழ்வு நிலை பிறப்புக்கு பெற்றோர் காரணமில்லை, விதி, கர்ம வினை, கடவுள் இட்ட சாபம் என்று ஒரு சிலர் சொல்வதும் அறியாமை. இது கருவிலேயே நிச்சயிக்கப்படும் விசயம். மரபணு (Chromosome) மற்றும் இயக்குநீர் (Hormones); விந்தைகள்தான் இத்தகைய பிறழ்வு நிலை பிறப்புகளுக்கு காரணம்[2]. இவ்வாறான மூன்றாம் பாலினத்தவர்கள் இவ்வுலகில் சுமார் 40 லட்சம்பேர் உள்ளனர். இதில் இந்தியாவில் மட்டும் சுமார் 4.9 லட்சம் பேர்கள் வாழ்ந்து கொண்டிருகின்றனர். அதில் சுமார் 22366 பேர்களுக்கும் மேல் தமிழ் நாட்டில் வசிக்கின்றனர். [3] சென்னையில் மட்டும் சுமார் 5,000 பேர்களுக்கும் மேல் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுள் சிலர் மட்டும்தான் தங்களை ‘அரவாணிகள்’ என்று பகிரங்கப் படுத்திக் கொண்டு வாழ்கின்றனர்.

**அரவாணிகள் மூன்று விதங்களில் வித்தியாசப்படுகிறார்கள்:**

**1.பேடி** (Transman): உடலமைப்பால் பெண்ணாக இருந்தும் மனதில் தங்களை உண்மையான ஆண் என்று நினைத்துக் கொண்டு, அத்தகைய மன உணர்வுகளில் வாழ்ந்து வருபவர்கள். அறுவைசிகிச்சை மூலம் சில உடலுறுப்புகளை அகற்றி விட்டு, பேண்ட், சர்ட் அல்லது ஜீன்ஸ் போட்டுக் கொண்டு முழு ஆணாகவே சமூகத்தின் பார்வைக்கு காட்சி தருவார்கள். இவர்களை பொதுவாக திருநம்பிகள் (Thirunambigal), என்று அழைக்கின்றனர்.[4]

**2.அலி**(Transwomen): இவ்வகையைச் சேர்ந்தவர்கள் பிறப்பால் ஆணாக இருந்தும் மனதில் பெண் உணர்வுகள் மேலோங்கும்போது தங்கள் பிறப்புறுப்பை அறுவைசிகிச்சை மூலம் அகற்றி விட்டு, முழுப் பெண்ணாகவே தங்களை நிர்ணயித்து கொள்கின்றனர். குழந்தை பெற்றுக் கொள்வது ஒன்றைத் தவிர. இவர்களை பொதுவாக திருநங்கைகள் (Thirunangaigal) என்று அழைக்கின்றனர்.[5]

**3. Double Deckers:** ஒரு ஆண் பெண்ணோடு உறவுக்கொள்வதும் பெண் ஆணோடு உறவுக்கொள்வதும் இயல்பு ஆனால் இவர்கள் இருபாலினத்தவருடனும் உறவுக்கொள்வார்கள். [6]

**அரவாணிகளின் பிறப்பும் வாழ்வும்:**

அரவாணிகள் என்று யவரும் தனியாக பிறப்பதில்லை, எல்லோர்க்கும் பிறப்பு பொதுவானதே, ஆனால் வளர்கையில் சிலர் உடல் மன வளர்ச்சியில் இயல்புக்கு மாறான மாற்றத்தை அடிப்படையாகக்கொண்டு மனித இனத்தில் மூன்றாம் இனத்தை அடையாளம் காண்கின்றோம். வாழ்க்கையில் தகுந்த வயதில், தகுந்த பருவமடையும் காலத்தில் இயல்புக்கு மாறான உடல் மன மாற்றத்திற்க்கு காரணம் ஆண்ட்ரோஜன் உணர்திறன் நோய்க்குறி (Androgen insensitivity syndrome - CAIS). இக்காரணத்தால் பிறக்கும் போதே சில குழந்தைகள் இத்தகைய உடற் கூறு கோளாறுகளுடன் பிறக்கின்றனர். பின்பு பருவ மாற்றத்தின்போது அவனுக்குள்ளும் ஆணுக்குரிய இயக்குநீர் (Hormone) சுரக்க தொடங்கி விடும். உயிரணு உற்பத்தியும் தொடங்கும். அதே நேரத்தில், அதைவிட வேகமாக பெண்தன்மைக்கான குணாதிசயமும், செயல்பாடும் அவனுக்குள் வளரும். இதனால் பருவமாற்றத்தின்போது ஆண், பெண்ணைவிட இவர்கள் அதிக மனக்குழப்பதை அடைவார்கள். இந்த மனக்குழப்பம் அறிகுறியை பெற்றோர் எளிதாக உணர்ந்து கொள்ளலாம். [7]

இந்த காலகட்டத்தில் அவர்கள் பள்ளியில் படித்துக் கொண்டிருப்பார்கள். வீட்டில், அவர்களின் பழக்க வழக்க முரண்பாடுகளை பெற்றோர் புரிந்து கொள்வது போல், பள்ளிக்கூடத்தில் சகமாணவர்களில் சிலரும் அந்த முரண்பாட்டை கண்டறிந்து விடுவார்கள். கேலி, கிண்டல் செய்வார்கள், இதனால் தாழ்வு மனப்பான்மை உண்டாகுவது, இயற்கை உபாதைகளை வெளியேற்ற பள்ளியில் உள்ள கழிவறையைகூட பயன்படுத்த இயலாத அவலநிலைஏற்படும். இதனால் தாகம் எடுத்தாலும் தண்ணீர் அருந்துவது இல்லை, அருந்தினால் சிறுநீர் கழிக்க நேரிடும். மீறி கழிவறை சென்றால் சில ஆசிரியர்கள் தண்டனை வழங்குவார்கள். இன்னும் சிலரோ சிறுநீர் கழிக்காமல் அடக்கி அடக்கி சிறுநீர் நோயத்;தொற்று ஏற்பட்டு மரணத்தை தழுவியுள்ளது அவலத்தின் உச்சம். ஒரு சிலர் 'பாலியல்' கண்ணோட்டத்தோடும் அணுகுவார்கள். இதனால் ஏன் இம்மண்ணில் பிறந்தோம் என்ற அளவிற்க்கு

வெறுப்பு, கோபம், எரிச்சல் தோன்றி, மன அழுத்தத்தின் உச்சத்துக்கு சென்று பள்ளிப்படிப்பை கைவிட்டுவிடுவார்கள். [8]

மனதில் இயற்கையாகவே முரன்பட்ட இனம்புரியாத உணர்வுகளைப் பெற்ற இவர்கள் அதற்;கு ஏற்ற உடல் உருவத்தைபெற முயலுகிறார்கள். பிறப்பால் ஆணாக வளர்ந்துவரும் ஒருவர் மற்ற ஆண்களை காணும்போது வெட்கப்பட்டு தலைகுனியத் தோன்றுவதும், நாணம் கொள்வதும், தலைவாரி பூச்சூடி, பெண்ணின் ஆடைகள் உடுத்தி, ஆபரணங்கள் அணிந்து இயல்பான பெண்களைவிட தான் ஓர் பேரழகி படைத்தவளாக கருதும் மன இயல்பும் இயற்கையாக அமைந்துவிடுகின்றன. [7]

வீட்டில் சமைப்பது, வீடு துடைத்தல், வாசல் கூட்டுவது, தண்ணீர் எடுத்தல் போன்ற பெண்கள் செய்யும் வேலைகளை அரவாணிகள்; செய்ய முற்படும்போது அண்டை வீட்டாரும், உறவினர்களும் அவ்வாரவாணியின் பெற்றோர்களை இழிவாகப் பார்ப்பதனால் சில குடும்பத்தினர் அரவாணிகளை திருத்தப் போவதாக கருதி அடிப்பது, சூடு வைப்பது, வீட்டில் பூட்டி வைத்து திருந்து என திட்டி தீர்ப்பார்கள், திருந்தாவிட்டால் செத்துபோ அல்லது வீட்டைவிட்டு வெளியே கண்காணா இடத்திற்கு போ என குடும்பத்தினர் ஏற்க மறுத்துவிடுகின்றனர். [5]

இவர்களுக்கு வீட்டில் சுதந்திரம் இல்லை, குடும்பத்தாரிடம் அன்பு இல்லை, மரியாதை இல்லை. இதனால் இவர்கள் வெளியிடங்களுக்கு சென்று தங்களுக்கென்று ஓர் உறவு முறையை ஏற்படுத்திக் கொண்டு குடும்ப சகிதமாக வாழத் துவங்குகின்றனர். இவர்களை மூத்த அரவாணிகள் தன் மகளாக தத்தெடுத்துக் கொள்கின்றனர். இதனை“ரீத்து” என்கிறார்கள். இவ்வாறு தத்தெடுத்துக் கொள்ளும் போது “சுவிகாரம்” எடுத்தல் என்ற விழா நடத்தப்படுகிறது. இவ்விழாவுடன் இணைத்து “நாமகரண விழா” என்ற பெயர் சூட்டு விழாவும் நடத்தப்படுகிறது. இவ்விழாக்களில் அரவாணிகளே கலந்து கொள்கின்றனர். [2]

தனக்கென ஒரு தனி உலகம், புதிய உறவுகள்,சுகமும், சுதந்திரமும், அன்பும், அரவணைப்பும் பெற்றுவிட்ட சந்தோசம், தங்களுக்கென ஒரு தனி மொழி, பாம்படத்தி, சேலா, குரு, டப்பர், கோடி, அல்தி மோந்தி என்று கவுடி மொழியில் புதிய புதிய பல செற்களுடன் பயணிக்கிறது வாழ்க்கை. இப்படி நிம்மதி பெருமூச்சு விடுகின்ற சில நாட்கள் நன்றாக நகர்கின்றன என நினைப்பதற்குள் வாழ்க்கை அதனுடைய சுயரூபத்தை காட்ட வேறுவடிவம் எடுக்கின்றது. [10]

அரவாணிகள் கூட்டத்திற்கு தலைவிகளாக விளங்குவோரை ‘நாயக்’, ‘சௌத்ரி’ என்று அழைக்கிறார்கள். இவர்கள் அரவாணி அமைப்புகளில் நடக்கும் நல்லது கெட்டது போன்ற நிகழ்ச்சிகளில் முதல் ஆளாக இருப்பது, அரவாணிகளுக்குள் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பது, குற்றம் புரிந்தவர்களை தண்டிப்பது, அபராதம் விதிப்பது, “ஜமாத்து” என்ற பஞ்சாயத்தைக் கூட்டுவது இவை எல்லாமே அவர்களின் மேற்பார்வையில் நடப்பதுமட்டுமல்லாமல் இவர்களது உத்தரவின்படி தான் மற்ற அரவாணிகள் நடக்க வேண்டும். அங்கு வாழ உணவு, உடை, இருப்பிடம், அறுவைசிகிச்சை, சடங்கு சாம்பிரதாயங்களை நடத்தவும், அரவாணிகள் அமைப்பிற்கு பணம் வசூலித்துதருவதற்கு ஓடவேண்டிய நிர்பந்தம். அதற்காக தவறான பாதைகளுக்கு திசை திருப்பப்படுகின்றனர். கடைக்குச் சென்று காசு கேட்டபது, பாலியல் தொழில் செய்வது இதனால் ஒரு சில இடங்களில் அரவாணிகளின் இயல்பான

தோற்றத்தையும், செயல்களையும் பார்த்துச் சிலர் கல்லைக்கொண்டு அரவாணிகள் மீது வீசி எறிவார்கள். பாலியல் தொழிலின்போது குடிகாரர்களிடமும், ரவுடிகளிடமும் சிக்கிக்கொண்டு அவர்கள் படுகின்ற துன்பங்கள் சொல்லில் அடங்காது. [11]

**அறுவை சிகிச்சைச் சடங்குகள்:**

அரவாணிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட அறுவைசிகிச்சைகள் செய்துக்கொள்கின்றனர். அவர்கள் வெளி மாநிலங்கள் சென்று மருத்துவமனைகளில் அறுவைசிகிச்சை செய்துக்கொள்கின்றனர் அல்லது தாயம்மாவிடம் சென்று தங்கள் உறுப்புகளை அறுத்துகொள்கின்றனர். இவ்வாறு அறத்துக் கொள்ளும் போது இறந்துவிட்டால் அது மாதா தண்டித்துவிட்டால் என்றாகிவிடுகிறது. பல வழிகளில் பணம் சம்பாதித்து அதற்கான செலவினத்தை ஈடு செய்தாலும் மருத்துவ அறுவைசிகிச்சையிலோ அல்லது வழக்கப்படி அறுத்துக்கொள்வதிலோ உயிருக்கு உத்திரவாதம் இல்லை. அறுவைசிகிச்சை வெற்றித் தோல்விகளுக்கான நேரடியான தரவுகள் இல்லை. “பகுசார தேவியே! மூர்கே மாதா! இனிவரும் பிறவியில் எங்களை அலிகளாக பிறக்கச் செய்யாதே!” என்று அரவாணிகளால் வேண்டிக்கொள்ள மட்டுதான் இயலும்.[9]

**அரவாணிகளின் பொதுவான நம்பிக்கைகள்:**


செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் முகமுடிகளை பிடுங்குவது இல்லை. பிளேடால் முகமுடிகளை நீக்கக்கூடாது, சிம்டாவை (முடிநீக்கும் கருவி) மட்டுமே பயன்படுத்த வேண்டும். சேவல் கறி உண்பதில்லை. காரணம் அவர்கள் வழிபடும் மாத்தாவின் வாகனம் சேவல். கண்ணாடி உடைவது, குங்குமம் சிந்துவது, பால் தவறுவது போன்றவற்றை கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர். அரவாணிகளைச் சமூகத்தில் மிகப் பெரிய குற்றங்களாக கருதுவது பெரிய மூத்த அரவாணிகளை மரியாதை இல்லாமல் பேசுவது. மூத்த அரவாணிகளைக் காணும் போது முட்டிக் காலைத் தொட்டு வணக்கம் செலுத்த வேண்டும். இதனை பாம்படுத்தி என்கிறார்கள். அரவாணிகள் பஞ்சாயத்தில் (ஜமாத்) இருந்து பாதியில் செல்ல நேரிடும்போது பாம்படத்தி என இரு கைகளையும் தலையில் வைத்துக் கூற வேண்டும். அரவாணி இறந்தவுடன் அவர் சார்ந்த சாதி, சமய முறைப்படி ஈமச் சடங்குகள் நடைபெறுகின்றன. ஈமச் சடங்கின்போது பெண்ணுக்கு செய்வது போலவே நடக்கிறது. ஆண்களை அருகே அணுக விடுவதில்லை. தென்னங்கீற்று மட்டையால் வேயப்பட்ட பாடையில் இறந்தவர் உடலை எடுத்துச் செல்வதால் இறப்புச் சடங்கை ‘மட்டை’ என அழைக்கிறார்கள். அரவாணிகளின் இறப்புச் சடங்கில் அரவாணிகள் தவிர மற்றவர்கள் கலந்து கொள்வதில்லை இறந்த அரவாணியின் மருமகள்கள், சேலாக்கள் அனைவரும் வளையல் உடைத்து, ஆபரணம் நீக்கி, வெள்ளைப்புடவை அணிந்து கொள்கிறார்கள். இவ்வாறு அரவாணிகள் மத்தியில் பல்வேறு பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் இருந்து வருகின்றன. [8]

**அரவாணிகளின் கல்வித் தகுதி மற்றும் விருப்பும்:**


கல்வித் தகுதி, தொழில் பற்றிய ஆய்வுத் தரவுகள் கீழ்கண்டவாறு அட்டவணைப் படுத்துப்படுகிறது. நூற்று ஐம்பது அரவாணிகளின்; கல்வித்தகுதியை கணக்கெடுக்கப்பட்டுள்ளது மேலும்

தாங்கள் என்னவாக ஆகவேண்டும் என விரும்புகிறீர்கள் என்ற கேட்ட கேள்விக்கு கிடைத்த தரவுகளை கீழ்கண்டவாறு விழுக்காட்டில் காட்டப்பட்டுள்ளது.

**படம் 1**




**படம் 2**




**கலந்துரையாடல்**

படம் 1ன் படி 20 விழுக்காடு அரவாணிகள் மட்டும்தான் 10ஆம் வகுப்புவரையில் படித்து படிப்பை நிறுத்தியுள்ளனர் மீதம் 80 விழுகாட்டினர் உயர்நிலைப் பள்ளி சென்றுள்ளனர், அதில் 50 விழுகாட்டினர் கல்லூரி பட்டங்களையும் பெற்றுள்ளனர். படம் 2ன் படி பெரும்பாலானோர் விரும்புவது ஏதாவது ஒரு மதிக்க தக்க வேலைகிடைக்கவேண்டுமென விரும்புகின்றனர். ஆனால் தன் அன்றாட நாட்களை எதிர்கால லட்சியத்திற்காக முயற்சியென்பது இல்லை, இவ்வாறான முரன்பாடுகளுக்கு காரணம் அவர்களின் குடும்பத்தினர் ஏற்க மறுத்துள்ளனர் இதன் விளைவாக ஒரு விழுக்காடு அரவாணிகள் கூட தன் குடும்பத்துடன் சேர்ந்து வாழ விருப்புவதில்லை என்பதை படம் 2ன் படி அறிந்துக்கொள்ள முடிகிறது. இத்தரவுகள் a report of the national transgender discrimination survey of Jaime M. Grant, Ph.D. போன்ற வல்லுனர்களின் அவதானிப்புகளின் மூலம் மேற்கூறிய ஆய்வு உறுதிபடுத்த முடிகிறது. [12]

**முடிவுரை:**

மேற்கண்ட தரவுகள் படி அரவாணிகளுக்கான விடுதலை போராட்டத்தை குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டிய நிலை இருக்கிறது. இவ்வாறு அரவாணிகள் ஒட்டுமொத்த துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் காரணம் குடும்ப அரவணைப்பு இல்லாததே ஆகும். உடல் ஊனமுற்ற குழந்தைகள், திருடர்கள், கொலையாளிகள் என தன் குழந்தைகளை பொற்றோர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அரவாணிகளை மனிதர்களாகவும் நினைப்பதில்லை முதலில் அவர்கள் ஒரு பெண் என்ற உணர்வே மேலோங்க வேண்டும். இந்த உணர்வு முதலில் குடும்பத்தில் தோன்ற வேண்டும். குடும்ப அமைப்பிலிருந்து அரவாணிகள் பெண்களாக வெளி வருகின்றபோது மற்றவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதற்குத் தயக்கம் இருக்காது. ஆகையால் அரவாணிகளை ஏற்போம்! அடிமையில்லா –

ஏற்றத்தாழ்வில்லா – சமூகத்தை உருவாக்க இவர்களுக்கு இருக்க இடமும், வேலைவாய்ப்பும், சமுதாயத்தில் உரிய அந்தஸ்தும் தரப்பட வேண்டும்.

**துணைநூற்ப் பாட்டியல்**


1. முனைவர் கி. அயப்பன் (2012): அரவாணியம், முதல் பதிப்பு, பக்கம்-272.
2. சூ. ம. செயசீலன் (2010): திருநங்கைகள் வாழ்வியல் இறைவியல், முதல் பதிப்பு, பக்கம்-88.
3. முனைவர் ந. அறிவுராஜ் (2008): மூன்றாம் பாலினம் ஒருசமூக இன வரைவியல்,முதல் பதிப்பு.
4. பிரியாபாபு (2007): அரவாணிகள் சமூகவரைவியல், முதல் பதிப்பு, பக்கம்-96
5. பிரியாபாபு (2007): வெற்றிப் பாதையில் திருநங்கைகள், முதல் பதிப்பு.
6. பாலுவினாயகம் சக்திவேல் (2007): கூவாகம் கூத்தாண்டவர், முதல் பதிப்பு, பக்கம்-125.
7. சி. இராமச்சந்திரன் (2008): தமிழ்ச் சமூகத்தில் அரவாணிகள் - ஓர் ஆய்வு, முதல் பதிப்பு, பக்கம்-104.
8. அயப்பன்.கி (2011): அரவாணிகள் அன்றும், இன்றும், முதல் பதிப்பு,பக்கம்-168.
9. பிரியாபாபு (2007): வெற்றிப் பாதையில் திருநங்கைகள், முதல் பதிப்பு.
10. அயப்பன்.கி (2011): அரவாணிகள் அன்றும், இன்றும், முதல் பதிப்பு, பக்கம்-168.
11. வே.முனி (2010): அரவாணிகளின் பன்முகஅடையாளங்கள் முதல் பதிப்பு, பக்கம்-174.
12. https://transequality.org/sites/default/files/docs/resources/NTDS_Report.pdf
13. https://www.census2011.co.in/transgender.php



**Copyright Holder:**

© Author(s) (2026).

**First Publication Right:**

© Tamilmanam International Research Journal of Tamil Studies

**This article is under:**


Tamilmanam